மாணவமாணவிகளுக்கு
ஓர் நற்செய்தி
நாலுவித
கணித வாய்ப்பாட்டுப்
புத்தகத்தை
இனமாகப் பெற்றுக்கொள்ள
அண்ணா தயாரிப்பின்
வெற்றுப்பக்கெட்டுகளை
அனுப்புங்கள்.
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 பங்குனி 31 ஜா ஆண் 4 இதழ் 62
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-4-78

## விடுமுறை அறிவித்தல்

சித்திரைப் புதுவருட தினமான 14-4-78 வெள்ளிக்கிழமை ஈழநாடு காரியாலயத்திற்கு விடுமுறையாதலால் 15-4-78 சனிக்கிழமைமட்டும் ஈழநாடு வெளிவரமாட்டாது என்பதை வாசகப் பெருமக்களுக்கும்விளம்பரதாரர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

— நிர்வாகி

### புகையிரதகணக்காளர் பிரிவு இங்குவந்தால்

# தனிநாட்டுக்கு அடிக்கல் நாட்டியதாக முடியும்!

## பிரதி அமைச்சருக்கு இப்படி தெரிவிக்கப்பட்டதாம்

### பாதிக்கப்பட்ட ஊழியர்சங்க இணைச்செயலாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

**ரயில்வே பகுதியின் கணக்காளர் பிரிவு யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுவது குறித்து பிரதி போக்கு வரத்து அமைச்சருக்கு தவறான கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் பிரிவு தனிநாட்டுக்கான அடிக்கல்லாகும் என பிரதி அமைச்சருககு தெரிவிக்கப்பட்டது.**

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்க இணைச் செயலாளரும் பாதிக்கப்பட்ட புகையிரத ஊழியர் சங்க செயலாளருமான திரு. கே. எஸ். ஆறுமுகம் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் இதைத் தெரிவித்தார்

கே எஸ் ஆறுமுகம் கூறியதாவது; "அனுராதபுரம் ரயில் நிலையத்தில் ஆகஸ்ட் 16, 17ந் தேதிகளில் கலவரம் ஆரம்பமாகி மற்றும் இடங்களுக்குப் பரவியது. சில நாட்கள் நீடித்தது. ரயில்நிலைய ஊழியர்கள் பலர் கலவரத்தினால் பாதிக்கப் பட்டனர்.

ரயில்நிலைய ஊழியர்களான சதாசிவம், நடராசா, கணக்காளர் இன்னத்துரை ஆகியோர் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் மரணத்தின் வாசலுக்குச் சென்று திரும்பினர், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் வேலைசெய்யமுடியாத நிலையில் உள்ளனர். சகல ரயில்நிலையத் தமிழ் ஊழியர்களும் கலவரத்தின்போது தாக்கப்பட்டனர்.

### புனித நகரம்?

அனுராதபுரம் புனித நகரமாக்கப் பிரகடனப்படுத்தப்பட்டபோதிலும் தமிழர் மனதில் அது ரகசிய நகராகவும் இறைச்சி வெட்டும் இடமாகவும் கருதப்படுகிறது.

"5-10-77ல் அரசாங்கம் ஒரு நல்லெண்ணக் குழுவை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. ரி. ஜெயசிங்கா தலைமையில் அனுப்பியது. இவருடன் பாதுகாப்பு அமைச்சு செயலாளர், இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், சமூகசேவைத் திணைக்கள அதிபர் ஆகியோரும் வந்திருந்தனர்.

இந்த நல்லெண்ணக் குழு யாழ்ப்பாணம் கச்சேரியில் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியரின் பல்வேறு குழுக்களைச் சந்தித்தது. இச்சந்திப்போது பாதிக்கப்பட்ட புகையிரத ஊழியர்சார்பில் நானும் வேறு பலரும் பாதிக்கப்பட்ட ஊழியரை வேலைக்கு அழைக்

(6ம் பக்கம் பார்க்க)

## மூதூர் தங்கத்துரை கைதாகி விடுதலை!

(திருகோணமலை)

மூதாரில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், மூதூர் முன்னாள் எம் பி யுமான திரு. அ தங்கத்துரை மூதூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மூதூர் பொலிசாரினால் திருகோணமலை மாவட்ட நீதிபதி திரு அகலவத்தை முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி 5ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 19ம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

திரு தங்கத்துரை சார்பில் திருமலை எம் பி திரு இரா சம்பந்தர் ஆஜரானார்.

இரு தினங்களுக்கு முன்னர் மூதூர் கிளிவெட்டிப்பகுதியில் இடம்பெற்றஅசம்பாவித சம்பவங்களில் இருவர் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

[இ]

## பூரணபொலிஸ்மரியாதையுடன்

### பஸ்தியாம்பிள்ளையின் சடலம் அடக்கம்

### ஆயிரம் பொலிசார் கலந்து கொண்டனர்

[கொழும்பு]

மன்னார்ப் பகுதியில் கொலையுண்ட துப்பறியும் பொலிஸ் பிரிவைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் உடல் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு நேற்று பூரண பொலிஸ் மரியாதையுடன் கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப் பட்டது.

தெகிவளையிலுள்ள திரு பஸ்தியாம்பிள்ளையின் வீட்டிலிருந்து பூதவுடல் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது சடலம் புல்லர்ஸ் வீதிக்கு வந்ததும் பொலிசார் பொறுப்பேற்றனர் சுமார் ஆயிரம் பொலிசார் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் பிரதி பொலிஸ்மா அதிபர்களும் உயர் அதிகாரிகளும் இறுதி ஊர்வலத்தில் சென்றனர் 16 துப்பாக்கி வேட்டுகள் தீர்த்து மரியாதை செலுத்தப்பட்டது

கொலையுண்ட சப் இன்ஸ்பெக்டர்கள் பேரம்பலம், பாலசிங்கம் ஆகியவர்களின் சடலங்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அவர்களின் ஈமைக்கிரியைகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இதில் துப்பறியும் பிரிவு உதவிப் பொலிஸ் அதிபர் வீரசிங்க கலந்து கொள்வார் கொழும்பிலிருந்து வந்த பொலிஸ் வாத்தியக் கோஷ்டியும் இதில் கலந்து கொள்ளும் சாரதி சிறிவர்தனாவின் உடல் வியாங்கொடைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது அங்கு அவருக்கு பூரண பொலிஸ்மரியாதை செலுத்தப்படும் டி ஐ ஜி ஆர் சுந்தரலிங்கமும் கலந்து கொள்வார்

### காரில் இருந்த றேடியோ

மன்னாரில் இந்த அதிகாரிகள் பிரயாணம் செய்த பேஜோ கார் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை

இந்தக் கார் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது இக் காரில் சக்தி வாய்ந்த வானொலி சாதனம் இருந்ததாகவும் கார் எரிக்கப்பட்டிருந்தால் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸ் வட்டாரங்களுக்கு இக்கருவி மூலம் தவறானசெய்திகளைக்கொடுக்க முடியும் என்றும் பொலிஸ்செய்திகளை ஒட்டுக் கேட்கமுடியும் என்றும் கருதப்படுகின்றது

இக் கொலை தொடர்பாக தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி பொலிஸ் பகுதியினருக்கு கட்டளையிட்டிருக்கிறார்

இதுவரைக்கும் எவரும் கைது செய்யப்படவில்லை [ம]

அன்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்
சிவபாலன் சைக்கிள் ஸ்ரோர்ஸ்
திறப்பு விழா
அன்புடையீர்!
நிகழும் காலயுக்தி ஆண்டு சித்திரைமாதம்
1-ம் நாள் நாளை (14-4-78) வெள்ளிக்கிழமை
பகல் 1-30 மணி முதல் 6-00 மணிவரை
வரும் சுபவேளையில்,
இது காலவரை கஸ்தூரியார் வீதியில் நடைபெற்றுவந்த
சிவபாலன் சைக்கிள் ஸ்ரோர்ஸ்
என்னும் ஸ்தாபனத்தை, மென்மேலும் சிறப்புற நடாத்த முருகன் திருவருளை முன்வைத்து இல: 75, மானிப்பாய் வீதிக்கு (மிட்டாசுக்கடைச் சந்திக்கருகாமையில்) இடமாற்றம் செய்யத் திருவருள் கைகூடியுள்ளது. ஆதலால் இதுவரை காலமும் எமக்கு ஆதரவு தந்து வியாபாரத்தை ஊக்குவித்த எமது வாடிக்கையாளர்களும், ஆதரவாளர்களும் வருகை தந்து மென்மேலும் ஆதரவு நல்கி சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.
75, மானிப்பாய் வீதி,
மிட்டாசுக்கடைச்சந்தி,
யாழ்ப்பாணம்.
இங்ஙனம்
நல்வரவை விரும்பும்
எம். எஸ். அப்பையா
9034

## புங்குடுதீவு
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பதிவு இல. 1648 -- 21-3-77

# பதவி வெற்றிடங்கள்

1. கடன் சந்தைப்படுத்தும் முகாமையாளர்.
2. தற்காலிக கிளை முகாமையாளர்.

மேற்கூறிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் இரு பாலாரிடமும் 25-4-78ந் திகதி வரை எமது சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றது. விண்ணப்பங்கள் "பொது முகாமையாளர், புங்குடுதீவு ப நோ. கூ. சங்கம், புங்குடுதீவு" என முகவரி இடப்பட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு, குறிப்பிட்ட திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**தகைமைகள்:**

1. கடன் சந்தைப்படுத்தும் முகாமையாளர் - தரம் 111.

வயது எல்லை 18-40
- அ. பட்டதாரியுடன் கூட்டுறவுப் பயிற்சி.
- ஆ. அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரமும் (உயர் பிரிவு) ஒரு வருட கால அனுபவமும்.
- இ. அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரமும் (சாதாரணபிரிவு)மூன்றுவருடகால அனுபவமும்;

2. தற்காலிக கிளை முகாமையாளர் - தரம் 111.

வயது எல்லை 18-40.
- அ. கல்விப் பொதுத் தராதரம் (சாதாரணம்) ஆறு பாடங்களில் சித்தியும், ஒரு வருட கால அனுபவமும் (வியாபாரம்).
- ஆ. சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- இ. வியாபார அனுபவத்தில் கூடியளவு அனுபவம் உடையவர்களுக்கும், தமிழ் ஆங்கிலத் தட்டச்சு அனுபவம் உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்படும் பணியாளர்கள் கூட்டுறவு ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமைவாகப் பிணைப் பணம் செலுத்துதல்வேண்டும். மேலதிக விபரங்களுக்கு எண். 15009/12ஏ - 72-5-12ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். (சம்பள விபரத்திற்கு)

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொது முகாமையாளர்
எஸ். பசுபதிப்பிள்ளை

10-4-78,
புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு. 9010

---

## மாம்பழங்கள் தேவை



உங்கள் மாமரங்கள் காய்த்திருக்கின்றனவா? அப்படியானால் உடனே அரஸ்கோ ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொள்ளுங்கள். மாங்காய்கள் முற்றுமல் இருந்தாலும் முற்றல் என மதித்து அதற்குரிய முழுப் பணத்தையும் உடனே செலுத்துவோம்.

இம்முறை எமக்கு மாம்பழம் தரும் மரச் சொந்தக்காரருக்கு எதிர்வரும் காலங்களில் அவர்களின் மரங்களில் கிருமிகளினாலும் பூச்சிகளினாலும் பூக்கள், இலைகள் கருகுதல், உதிர்தல் முதலியவற்றைத் தடுத்தல், நன்கு காய்ப்பதற்கு ஆலோசனைகள் கூறல் முதலிய சேவைகளைச் செய்வோம்.

உடன் எம்முடன் தொடர்பு கொள்க:-

**அரஸ்கோ இன்டஸ்றீஸ்**

163, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7537

---

# VACANCIES

The following situations have been fallen vacant in our firm due to our expansion programme.

(1) Draughtsman (Mechanical)
(2) Mechanical Engineering Technicians (NDT / JTO)
(3) Trainee Engineers (Partly qualified and pending results)

We are looking for dynamic enthusiastic young men for the above positions to join our team to work on various interesting projects in the North.

If interested apply with testimonials to reach the undermentioned on or before 30th April 1978.

Works Manager,
**Promoters Engineering Company Ltd.**
844, Point Pedro Road,
Nallur, Jaffna.
Sri Lanka

---

## பின்னுறுதிக் கட்டளை

பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற செல்லையா நமசிவாயம் பொலிகண்டி வல்வெட்டித்துறை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

- மரணமெய்தியவர்

நமசிவாயம் கைம்பெண் சிவகாமிப்பிள்ளை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

- மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல: 427

எதிர்

1. சபாரத்தினம் சிவஞானசுந்தரம் பெண் இராஜேஸ்வரி,
2. நமசிவாயம் சிறீகாந்தன் [பராயமற்றவர்கள்]
3. நமசிவாயம் விஜேந்திரன்
4. நமசிவாயம் சிவகுமாரன்
5. நமசிவாயம் நந்தகுமார்

- எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு பங்குனி மாதம் 17ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.
[ஒப்பம்]
க. விஸ்வலிங்கம்
பதிவாளர்

ஆக்கம்
இ. சதானந்தன்
மனுதாரின் சட்டத்தரணி
1978-2-17.

17-5-1978க்கு நீடிக்கப்பட்டது.

(ஒப்பம்)
க. விஸ்வலிங்கம்
9025 பதிவாளர்

---

## கேள்வி விளம்பரம்

1. நயினாமடு கரப்புக்குத்தி றோட் வேலை.
2. மதியாமடு இன்னப் பூவரசங்குளம் றோட் வேலை.

மேற்படி இரண்டு வேலைகளுக்குமான கேள்விகள் 3 5-78 புதன்கிழமை காலை 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 50/-ம் மீளளிக்கப்படும். கேள்வி வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் 2 5-78 செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் மேல்பற்று தெற்கு கிராமசபையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரித்து, தபாலுறையில் இடப்பட்டு, தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு, பதிவுத் தபால்மூலம், ஒருபிரதியை எமக்கும், மறுபிரதியை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர், வவுனியா அவர்கட்கும் அனுப்பப்படல்வேண்டும்.

வ. நீலகண்டன்,
விசேட ஆணையாளர்.

மேல்பற்று
தெற்கு கிராமசபை,
நயினாமடு, நெடுங்கேணி
6-4-78. 9027

---

## அறிவித்தல்
### வீதிக்குப் பெயர் இடுதல்

1. யாழ்ப்பாணம் வேம்படி வீதியின் ஒரு பகுதிக்கு (காங்கேசன்துறைவீதியிலிருந்து முதலாம் குறுக்குத் தெரு வரை) சேர். வைத்திலிங்கம் துரைசாமி வீதியென ஏற்கனவே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வேம்படி வீதியையும் (முதலாம் குறுக்குத் தெரு வீதியிலிருந்து மடம் வீதி வரை) சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதி என மாற்றுப் பெயரிட உத்தேசிக்கப் படுகிற தென்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

2. இது சம்பந்தமாக அப்பகுதியில் வசிப்பவர்களின் அல்லது அப்பகுதியிலுள்ள அமைப்புக்களின் அல்லது நிறுவனங்களின் கருத்துக்கள் இவ்வறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலம் வரை இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்.

வேலைப்பகுதி, யாழ்ப்பாணம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
10-4-78. 9019

---

## கேள்வி விளம்பரம்

1978ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி வரை தெல்லிப்பளை கிராமாட்சிமன்ற விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுத்தபால் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்பவருக்கு பிரதியுடன் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மூலையில் என்ன வேலைக்கான கேள்வி என எழுதப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் 1978ம் ஆண்டுஏப்பிரல்மாதம் 24ம் திகதியிலிருந்து 1978ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27ம் திகதி மாலை 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி வைப்புப்பணம் ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. சடச்சப்பை வீதி திருத்தம்.

கே. மகாதேவா
(ஒப்பம்)
விசேட ஆணையாளர்,
தெல்லிப்பளைக் கிராமசபை.
கிராமாட்சிமன்றப்பணிமனை,
தெல்லிப்பளை.
10-4-78. 9031

---

## தேவை

எமது தொழிற்சாலையில் தச்சுத் தொழிலாளர். யந்திர பழுது பார்க்குனர் (Mechanic) வேலைகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. மேற்படி தொழில்களில் குறைந்தது 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும் அனுபவத்திற்கேற்ப ரூபா 20/- வரை (எல்லாம் உட்பட) நாளாந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 20-ம் திகதி அன்றோ அல்லது அதற்குமுன்பாகவோ தமது விண்ணப்பங்களை எமக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும்

பொதுமுகாமையாளர்
சிநோர் அபிவிருத்தி
நிறுவனம்
காரைநகர் 9032

---

## வரி விளம்பரம்

### கல்வி

தனிப்பட்ட முறையாகவோ அல்லது வீடுகள் சென்று ஆங்கில இலக்கண, இலக்கியம் (Emma Mc Beth) பேச்சு Spoken English கற்றுக் கொடுக்கப்படும். விளம்பர இல 8920 C/o யா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8920

### தவறிவிட்டது

இரண்டு திறப்புக்கள் வெள்ளை நீலநிற பிளாஸ்ரிக் அடையாளத்துண்டுடன் பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம்வழங்கப்படும். ஜீ. ஸ்ரீதரன், மூகம்மதலி-அப்துல்அலி, பெரியகடை, யாழ்ப்பாணம். 9011

### தேவை

'அடங்காப் பிடாரி' புகழ் சுண்டிக்குழி யாழ் நாடகக் கலாமன்ற நாடகங்களில் நடிக்க நடிகைகள் தேவை. விபரங்களுக்கு: பரமானந்தம், சுண்டிக்குழி யாழ். நாடகக் கலாமன்றம், 64, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 9024

நல்ல நிலையிலுள்ள சவலெற் அல்லது டொஜ் பெற்றோல் லொறி தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இ. க. க. குருதேவர்; "மீரு இல்லம்" மயிலிட்டி. 8970

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும்தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவிளாஸ் அன் மெற்றல்வேக்ஸ், நீர்வேலி. 8994

### விற்பனைக்கு

14-4-78 புதுவருடப்பிறப்பன்று மானிப்பாய் மருதடி தேர்த் திருவிழாவில் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் மில்க்வைற் தயாரிப்புகள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8972

### பயிற்சி

16-22 வயதுடைய இளைஞர்கட்கு 1978/79 ஆண்டுக்குரிய ஒரு வருட விவசாயப் பயிற்சி வைகாசி மாதம் ஆரம்பமாகும். 26-4-78 க்கு முன்பு நகல் பிரதி சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ். க. விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம். 8991

---

## இன்று சாம்பியன் மோதல்
(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்று வந்த உதைபந்தாட்ட 'நொக் அவுட்' போட்டியின் சாம்பியன் மோதல் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்

இந்த இறுதிப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், குருநகர் 'பாடும் மீன்' கழகமும்மோதிக் கொள்கின்றன.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. நன்முத்துகன பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். (அ)

ஈழநாடு
The Eelanaadu

# ★ அரசியல் விடுதலை ★ பொருளாதார சுபீட்சம்

# வி.பி.யின் ஆற்றலை கூட்டணி பயன்படுத்த வேண்டும்

## 'அமிர்' விருப்பம்

[யாழ்ப்பாணம்]

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமிழினத்தின் எதிர்கால அரசியல் விடுதலைக்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் நண்பர் திரு. வி. பி. யின் திறமையையும் ஆற்றலையும் முற்றுமுழுதாகப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன்".

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று தமக்கு அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தில் பேசுகையில் கூறினார்.

சங்கத்தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவரிடம் கி மு சங்கத் தலைவர் தமது தேவைகள் பற்றிய மகஜர் ஒன்றினை கையளித்தார்.

திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது!

### கூட்டுறவு இயக்க நிலை

என்றும் இல்லாத நிலையில் கூட்டுறவு இயக்கம் இன்று கடும்பரிசோதனைக்கு உள்ளாகியுள்ளது.

கூப்பன்கள் எண்ணிக்கையை இழந்தும் வெற்றுப் பொருட்களை விற்பனை செய்யும் உரிமையை அரசு மறுத்திருக்கும் இன்றைய நிலையில் தொழில்துறையில் ப நோ கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுவதன் அவசியத்தை நான் முற்றாக உணர்கிறேன். இத்துறையில் அளவெட்டி - மல்லாகம் கூட்டுறவுச்சங்கத்தின் மகஜரில் கேட்டுக்கொண்டுள்ள மின் தறி பெற்றுத்தரும் கடமையை நான் உடன் மேற்கொள்ள ஆவன செய்வேன்.

### அரசியல் ஒற்றுமை

அளவெட்டி தனக்கே உரிய கூட்டுறவுப் பண்புகளை வளர்த்த ஓர் கிராமம், திரு வி பொன்னம்பலம் தலைமை தாங்கி அரசியலில் மாறுபட்டிருந்த நிலையிலும் கூட அன்றைய பிரதமர் டட்லி சேனநாயகாவை அழைத்ததையும் கூட்டுறவாளர் வீதி என்ற பெயர் சூட்டு வைபவத்தையும் நாம் மறப்பதற்கில்லை. அரசியலில் மாறுபட்டிருந்த போதிலும் திரு. டட்லி சங்கத்தையும் தலைவர் திரு வி பி யைப் பாராட்டி என்னிடமே கூறினார்.

இன்று அளவெட்டியில் என்றும் இல்லாதவகையில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டுள்ளது செந்தமிழர் இயக்கம் கூட்டணியுடன் ஓரணியில் நிற்கிறது. எனவே எமது இயக்கத்தினரை தமிழினத்தின் எதிர்காலத்தின் அரசியல் விடுதலைக்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் நண்பர் திரு வி பி யின் திறமையையும் ஆற்றலையும் முற்றுமுழுதாக பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன்" என்றார்.

ஊழியர்கள் சார்பில் திரு வை. செல்லையா நன்றியுரை நிகழ்த்தினார். [உ]

# அமிருக்கு புதிய கார்

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்துக்கு இப்போது வேறொரு கார் அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

'வெக்ஸ்ஹோல் வென்ரோறு' ரகத்தைச் சேர்ந்த இந்த நீலநிறக்கார் முன்னைய கார் விபத்துக்குள்ளானதை அடுத்து வழங்கப்பட்டுள்ளது. [ம-இ]

# எம். பிக்கள் 'ஜீப்' பெற்றனர்

[கொழும்பு]

பருத்தித்துறை, பட்டிருப்பு, காங்கேசன்துறை எம் பி.க்கள் அரசினால் வழங்கப்பட்ட 'ஜீப்' புக்களை நேற்று முன்தினம் பெற்றுக்கொண்டனர் (இ)

# பஸ் சேவை

வவுனியா, அனுராதபுரம் ஆகிய டிப்போக்களுக்குப் புதிய பஸ்கள் அடுத்தவாரம் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் இதற்கான உத்தரவை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது வழங்கியிருப்பதாகவும் ஒருசெய்தி கூறுகிறது,

வவனியாவுக்குச் சமீபத்தில் விஜயம்செய்த போக்குவரத்து அமைச்சர் நிலைமையை நேரில் அவதானித்தபின் இந்த உத்தரவைப்பிறப்பித்திருக்கவேண்டும்,

இந்தவகையில் போக்குவரத்து அமைச்சர் ஒவ்வொரு நகரத்துக்கும், கிராமத்துக்கும் கூட விஜயம்செய்தால் நல்லதென்றே தோன்றுகின்றது.

போக்குவரத்துச் சேவை நாளுக்குநாள் சீர்கேடடைந்து வருகிறதேயொழிய திருந்திய பாடாகஇல்லை.

எந்த அரசாங்கம் வந்தாலும் எவர் போக்குவரத்து அமைச்சராக பதவியேற்றாலும் போக்குவரத்துச் சேவையைச் சீர்திருத்தப் போவதாக என்னதான் வாக்குறுதியளித்தாலும் நிலைமை திருந்தியதாக இல்லை.

தனியார்துறையினர் பஸ் போக்குவரத்துச்சேவை நடத்தியபோது அளவுக்கதிகமாகப் பிரயாணிகளை ஏற்றக்கூடாது என்பது போன்ற சட்டவிதிகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

ஆனாலும் தனியார்துறையினர் பஸ்போக்குவரத்துச் சேவையை ஓரளவு சிறப்புற நடத்தியதுடன் நல்ல இலாபமும் சம்பாதித்து வந்தனர்.

கட்சி அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒரே நாளில் எல்லா பஸ்களையும் அரசு பொறுப்பேற்கவேண்டுமென்று அப்போதிருந்த பண்டாரநாயகா அரசாங்கம் முடிவுசெய்தது.

பலநாடுகளிலும் போக்குவரத்துச்சேவை அரசின் பொறுப்பிலிருக்கிறதென்பதும் அது இலாபகரமாகவும் பொதுமக்களுக்குச் சிறந்தமுறையில் சேவையாற்றிவருவதும் உண்மையே.

எமது அயல் நாடாகிய தமிழ் நாட்டிலும் பஸ் போக்குவரத்துச் சேவையை தேச உடமையாக்கியது ஆனாலும் தனியார்துறையினருக்கும் இச் சேவையில் இடமளிக்கப் பட்டிருக்கிறது

இதனால் அரசாங்கப் பொறுப்பிலுள்ள போக்குவரத்துச் சேவைக்கும் தனியார் துறையினரின் பொறுப்பிலுள்ள போக்குவரத்துச் சேவைக்கும் போட்டியேற்பட்டு நல்ல முறையில் போக்குவரத்துச் சேவை நடைபெற வழியேற்பட்டுள்ளது.

நமது நாட்டில் பஸ்களின் பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாணம் டிப்போவிலிருந்து நடைபெற்று வந்த நீண்ட தூரப்பஸ் சேவைகள் சில சமீபத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கைப் போக்குவரத்துச் சபை போக்குவரத்துச் சேவையை மிகக் கஷ்டப்பட்டு நடத்துகிறது. இலாபமும் அதிகமில்லை; பிரயாணிகளுக்கும் திருப்தியில்லை.

இந்நிலையில் தனியார் துறையினருக்கும் சிறிது சந்தர்ப்பமளித்துப் பார்த்தால் என்ன?

# சிறுபான்மையினர் பிரச்னை: விசேட குழு ஆராயும்

## நீதி அமைச்சர் தேவநாயகம் தகவல்

[கொழும்பு]

சிறுபான்மையினரின் பிரச்னைகள் பற்றி ஆராய விரைவில் ஒரு குழு அமைக்கப்படும்.

இத்தகவலை நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பு மேற்குத்தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற திரு. அனுரா பஸ்தியானுக்கு வெள்ளவத்தையில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போதே திரு. தேவநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

சகல இனமக்களும் ஒற்றுமையுடனும் சமஉரிமையுடனும் வாழவேண்டும் என்பதே அரசின் கொள்கை என்றும் ஐ. தே. அரசின் மேல் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை திரு. பஸ்தியானின் வெற்றி எடுத்துக்காட்டுகிறது. என்றும் திரு. தேவநாயகம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

இன, மத, மொழி பாகுபாடின்றி சிறுபான்மையினரின் பிரச்னைகளை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுப்பார். இந்நாட்டு மக்களுக்கு இன, மொழி வேறுபாடின்றி சகல உரிமைகளையும் அனுபவிக்க இடமுண்டு

கடந்த காலத்தில் பதவியிலிருந்தவர்களால் எமது பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. இந்நிலைமையை இன்றைய அரசு மாற்றியமைத்துள்ளது. நாற்பது வருடகால அரசியல் அனுபவமுள்ள எமது தலைவர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவரின் தலைமையின்கீழ் இன்று நாடு சிறப்பாக முன்னேறி வருகின்றது.

சுதந்திர வர்த்தக வலய திட்டத்தின் மூலம் நாம் பெரும்பயன் அடையபோகிறோம். இதற்குப்பிறகு எமது நிதியமைச்சர் ஒவ்வொரு நாடுகளுக்குக்கும் நிதி தேடிப் போகத்தேவையில்லை. நாம் பொருளாதாரவளத்தினை பெருக்கிக் கொள்ளவேண்டும்.

வெலியத்தை எம். பி. ரஞ்சித் அத்தபத்து திரு. டி. பெரேரா திரு. கே. கந்தசாமி, உட்பட மற்றும் பலர் பாராட்டிப் பேசினார்கள்.

[ம. வென். நி. இ]

# வடபகுதி பஸ்சேவை சீர்கேடு: அமைச்சர் நடவடிக்கை

[கொழும்பு]

வடபகுதி பஸ் சேவை சீர்கேட்டை உடன் கவனிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம் எச் முகமட் இ போ ச முகாமையாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த 6 மாத காலத்தில் வடபகுதிக்கு அனுப்பிய புதிய பஸ்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களையும் தனுப் [illegible] முகமட் கோரியுள்ளார்.

ஊர்காவற்றுறை எம் பியின் கோரிக்கைக்கு இணங்க தீவுப் பகுதி பஸ் சேவையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதியொன்று ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [ம-இ]

# செக். நிறுவனம் வடபகுதிக்கு உதவும்

(கொழும்பு)

உலகப் புகழ்பெற்ற செக்கோஸ்லவாக்கியாவிலுள்ள 'இன்வெஸ்ட்டா' நிறுவனம் தனது உற்பத்தியான மின்தறி நெசவு இயந்திரங்களை வடபகுதியிலுள்ள கூட்டுறவாளர்களுக்கும், தனியார் துறையினருக்கும் கடன்முதலீட்டு அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன. இவ் ஒப்பந்த அடிப்படையில் சங்கானை, சாவ

5-ம் பக்கம் பார்க்க

# சிறந்த நடத்துநர் யார்? முடிவுதிகதி மேலும் நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். ரோட்டரிக் கழகம் நடாத்தவிருக்கும் சிறந்த பஸ் நடத்துநருக்கான போட்டியின் விண்ணப்பமுடிவுதிகதி இம்மாதம் 25ந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரிசளிப்புவிழா மாதம் 29ம் திகதி நடைபெறும்.

யாழ் டிப்போவைச்சேர்ந்த நடத்துநர்களைமட்டுமே தெரிவு செய்யலாம்.

### மனவாக்கு

நோயுற்ற உடலைத்தாங்கிக் கொள்ளலாம். ஆனால் நோயுற்ற மனதைத் தாங்க முடியாது.

- காந்திமகான்


# யாழ். ரோட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

நடத்துநரின் பெயர்....................................................

பதிவு இலக்கம்....................................

அனுப்புபவரின் பெயர் ....................................................

அனுப்புபவரின் விலாசம்....................................................

திகதி ..................................................................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)



## சமூக விரோத சக்திகள் அரசுக்கு எதிராக மேற்கொண்ட திட்டமிட்ட சதி

## விவசாயிகள் கிளர்ச்சி குறித்து எம். ஜி. ஆர். கவலை

சென்னை, ஏப். 12
சமூக விரோத சக்திகள் அரசுக்கு எதிராக முன்கூட்டியே திட்டமிட்ட சதிநடவடிக்கையே தமிழ்நாட்டில் இடம்பெற்றவிவசாயிகளின் கிளர்ச்சி

தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு சிலர் வன்முறையில் ஈடுபட்டமையினாலேயே அரசு விரும்பாத வழியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதென்றும் எம் ஜி ஆர் கவலை தெரிவித்தார்

விவசாயிகள் கிளர்ச்சியினால் 15 பெரிய பாலங்களும், 3 சிறிய பாலங்களும், 5 அரச பஸ்களும், 3 பொலிஸ் டிரக்குகளும் சேதப்படுத்தப்பட்டன.

காவல்துறையைச் சேர்ந்த 50 பேர் தாக்கப்பட்டனர் என்றும் எம் ஜி ஆர் கூறினர்.

### எம். ஜி. ஆர். நம்பிக்கை

விவசாயிகளின் கிளர்ச்சி நடவடிக்கைகள் விரைவில் முடிவுக்கு வந்துவிடுமென நம்புவதாகவும் திரு இராமச்சந்திரன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

### கருணாநிதி கோரிக்கை

சென்னை ஏப் 12
விவசாயிகள் கிளர்ச்சி நடவடிக்கையின்போது துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்குபேர் பலியானது குறித்து நீதிவிசாரணைக்கமிஷன் ஒன்றை அமைத்து, விசாரணை செய்யவேண்டும் என்று திமுக தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு மு. கருணாநிதி தமிழக அரசைக் கோரியுள்ளார். (இ)

## யாழ். அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரில் வழங்கிய ஆகஸ்ட் கலவர நிதி விபரம்: பண்டிதர் பேரவையில்கேள்வி

(கொழும்பு)
கடந்த ஆகஸ்ட் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். கச்சேரியில் நிவாரண நிதி வழங்கப்பட்டது குறித்து சகல விபரங்களையும் ஊர்காவற்றுறை தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் சமூகசேவைகள் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபரின் சிபார்சின்பேரில் நிவாரணநிதி வழங்கப்பட்டவர்களின் பெயர், முகவரி ஆகியவற்றையும் பண்டிதர் கேட்பார்.

தேசிய அரசுப் பேரவையில் இக்கேள்விகளைக்கேட்பதற்காக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் பண்டிதர். (ம-இ)

## மணப்பெண் நகை மீது மங்கைக்கு ஏற்பட்ட மையல் பொலிஸில் சிக்கவைத்தது

(மட்டுவில்)
நகைமீதுஆசைகொண்டஒரு யுவதி, அடுத்தநாள் விடியத் திருமணத்திற்காக இருந்த மணப்பெண்ணின் நகைகளைச் சுருட்டிக்கொண்டு வெளியேறினாராம்.

மணப்பெண் வீட்டார் பொலிஸாருக்கு தகவல்கொடுத்ததைத் தொடர்ந்து, சாவகச்சேரிப் பொலிசார் நகைகளுடன் பிரஸ்தாப யுவதியைக் கைதுசெய்தனர்.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ஊர்காவற்றுறை பொலிஸ் பகுதியைச்சேர்ந்த புளியங்கூடல் வாசியான இராசையாவின் புதல்வியின் திருமணத்திற்காக 10,000 ரூபா பெறுமதியான நவீனடிசையின்நகை

(5-ம் பக்கம் பார்க்க)

## 45,000 பாக். பிரஜைகளுக்கு இந்திய பிரஜா உரிமை

புதுடில்லி, ஏப். 11
இந்திய - பாக் எல்லையில் வசிக்கும் 45 ஆயிரம்பாகிஸ்தான் பிரஜைகளுக்கு இந்தியப் பிரஜா உரிமைவழங்குவதென்று இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இருநாட்டு அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த முடிவு செய்யப்பட்டது.

# பூட்டோ - இந்திரா இரகசியஒப்பந்தம்

புதுடில்லி, ஏப். 11
முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவும் இருநாடுகளுக்கிடையே இருந்துவந்த காஷ்மீர் பிரச்னை தொடர்பாக இரகசிய ஒப்பந்தம் ஒன்றை தங்களுக்குள் செய்து வைத்திருந்தனர் என்று புதுடில்லியில் உயர் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இரகசிய ஒப்பந்தம் குறித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ பி. வாஜ்பாய் அண்மையில் வெளியிட்டிருந்த தகவலை உறுதிப்படுத்தியே இந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)


வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
மனிதனும் தெய்வமாகலாம்

புலோலி சினிமா (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
சிவாஜி - சாவித்திரி நடித்த
எல்லாம் உனக்காக

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
Mark Forest Chelo Alonso in
Maciste In The Valley of Kings
(Color)
From 15-4-78 Kirk Douglas Richard Harris in
Heroes of Telemark
(Colour Scope—war film's)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

2வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648;
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி... சாவித்திரி... ஜெமினி மற்றும் பலர் நடித்த பக்திப் பரவசமூட்டும். A. P. நாகராஜனின் ஈஸ்ட்மன் கலர்
கந்தன்கருணை
ஏப்ரல் 15ம், 16ம் திகதிகளில் காலை 8-30 மணிக்கு மட்டும்
"BEST OF CHARLIE CHAPLIN"

புதுவருட வெளியீடு
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம் (புதிய பிரதி)

2-வது வெற்றி வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.--வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
விஜயகுமார் நடித்த
தாயில்லா குழந்தை

Now Showing
Rio (Jaffna) (phone:7607)
Carry on up the Jungle
15-4-78
KRAKATOVA EAST JAVA

யாழ். லிடோ
தினசரி 4 காட்சிகள்
மற்றும் ஏழு திரைகளில்
சிவபாதவிருதயர் வேதநாயகம் சாம்பசிவம் கந்தசாமி
டீன்குமார் ஜவாஹர் அமரசிங்கம் ஹெலன் சந்திரகலா
மற்றும் பலர் நடித்த
தென்றலும் புயலும்

## யாழ். வளாக கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாகத் தமிழ் மன்றத்தின் வருடாந்தக் கலைவிழா மே மாதம் 6ம், 7ம் திகதிகளில் திருநெல்வேலி பிரிவில் நடைபெறவுள்ளது.

காலையில் கருத்தரங்கு போன்ற இயல்நிகழ்ச்சிகளும் மாலையில் இசை, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இறுதி தினத்தில் 'தமிழர் வாழ்வு' என்னும் பொருட்காட்சியும் இடம்பெறும். (உ)

## மணப்பெண்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கல் செய்துவைக்கப்பட்டிருந்தனவாம். அவரின் உறவினரான யுவதி ஒருவர் மணப்பெண் வீட்டிற்குச் சென்று சகல வேலைகளிலும் உதவி செய்து வந்தாராம்.

ஓய்வான வேளையில் மணப்பெண் தன் திருமண நகைகளை அந்த யுவதிக்குக் காண்பித்தாராம். நகைகள்மீது யுவதிக்கு ஆசை ஏற்பட்டதாம். விடியத் திருமணம் முதல்நாள் மாலை வீட்டில் ஒரே தடல்புடலாக இருந்தது. பெற்றோல் மாக்ஸ் 'மக்கர்' செய்யத் தொடங்கியது. யுவதியின் கைகளில் மணப்பெண்ணின் நகைப்பெட்டி கிடைத்ததாம். உடனே அவர் நகைப்பெட்டியுடன் ஊரைவிட்டே வெளியேறினாராம். மறுநாள் காலைதான் நகையைக் கண்டுபிடிக்க பெண்வீட்டார் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. பொலிசாரின் உதவியை அவர்கள் நாடினர்.

ஊர்காவற்றுறைப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர். சாவகச்சேரியில் ஒரு யுவதி நிறைய நகைகளுடன் கால்நடையாகச் சென்றுகொண்டிருந்தார். இந்த யுவதிமீது சார்ஜன்ட் திரு எம். அந்தசாமிக்கும், கன்ஸ்டபிள் திரு. நிக்கிலாசுக்கும் சந்தேகம் ஏற்பட்டது.

யுவதியை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர். யுவதி விஷயங்களை அப்பட்டமாகக் கூறினாராம்.

அவரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்துகொண்ட பொலிசார், ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு அறிவித்து, அவர்களிடம் யுவதியை ஒப்படைத்தனர். [உ]

## வங்கி கைவிசேஷம் வழங்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கி புதுவருட தினத்தன்று வெள்ளிக்கிழமை கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

அன்றைய தினம் புதிதாக கணக்கு ரூபா 10உடன் ஆரம்பிப்பவர்களுக்கு ஏற்கனவே கணக்குடையோர் தங்கள் கணக்கில் ரூபா 10க்குக் குறையாமல் வரவு வைத்தாலும் புதுவருடக் கைவிஷேசமும், பஞ்சாங்கக் கலண்டரும் அவர்களுக்கு வழங்குவதற்கு வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

இப்புதுவருடக் கைவிஷேசம் வழங்கும் நிகழ்ச்சி வெள்ளியன்று காலை 9க்கும் 12க்கும் இடையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பநோக சங்க இயக்குநர்களும், ஊழியர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். [உ]

## செக், நிறுவனம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி, அளவெட்டி, சுன்னாகம், நல்லூர் கூட்டுறவாளர்கள் நன்மையடைவர்.

செக்கோஸ்லவாக்கியாவுக்கும் இலங்கைக்குமிடையில் வளர்ந்துவரும் நட்புறவே இவ்நிறுவனம் கடன் அடிப்படையில் இந்த இயந்திரங்களை வழங்குவதற்கான காரணமாகும்.

இன்வெஸ்டா நிறுவனத்திற்கும், யாழ்ப்பாணம் புரூ மோட்டோர்ஸ் என்ஜினியரிங் லிமிட் நிறுவனத்திற்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பயனாக இச்சலுகை கிடைத்துள்ளது.

'இன்வெஸ்டா' ஸ்தாபனத்தின் வர்த்தகப் பிரமுகர்கள் குழுவொன்று மே மாத நடுப்பகுதியில் வருகைதந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவார்.

இயந்திரங்களை கொள்முதல் செய்யும், கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் தனியார்துறைகளிலிருந்தும் தலா ஒருவருக்கு செக்கோஸ்லவாக்கியாவில் இலவசமாக ஒருவருடப் பயிற்சி அளிக்கப்படும் என்றும் இந்நிறுவனம் உறுதியளித்துள்ளது. (செ-இ)

## ஏழாலையில் நடகவிழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலை ஸ்ரீ சக்தி நாடக மன்றத்தின் 2வது ஆண்டு விழாவை யொட்டி நாடக விழா ஒன்று எதிர் வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

திரு. சி. அருச்சுனன், முன்னாள் ஏழாலைக் கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு, புதுமைலோலன் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவர்.

ஐந்து நாடகங்கள் இவ்விழாவில் இடம் பெறும். [உ]

...

## சட்டத்தரணி தொழிலில் ஒய்வு பெற்ற அதிகாரி



[கொழும்பு]

"இலங்கைபரிபாலனசேவை முதற்பிரிவைச் சேர்ந்தவரும் ஓய்வூதிய திணைக்களத்தின் அதிபராகவும் கடமையாற்றியவருமாகிய திரு. ஆ. பாலசுப்பிரமணியம் சமீபத்தில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று கொழும்பில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக தற்போது கடமைபுரிகிறார்.

இவர் அரசாங்கத்தில் பல முக்கியத்துவம் வாய்ந்த உயர் பதவிகளை வகித்துள்ளார். சமூகசேவை திணைக்களத்தில் உதவி அதிபராகவும், இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி கட்டுப்பாட்டு அதிபராகவும், வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராகவும், காப்புறுதி கட்டுப்பாட்டு அதிபராகவும், பின் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஜெனரல் மனேஜராகவும், பிரதான நீதி உத்தியோகஸ்தராகவும், ஸ்ரீலங்கா அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு பாலசுப்பிரமணியம் இலங்கை லண்டன் பல்கலைக்கழகத்தில் இதிகாசத் துறையில் உயர் பட்டதாரியாகினார். சட்டக்கல்வியை லண்டனில் லிங்கன் இன்னிலும் கொழும்பு சட்டக்கல்லூரியிலும் தொடர்ந்து முடித்து உயர்நீதிமன்ற வழக்கறிஞராகவும் 1972ம் ஆண்டு சட்டப் பிரமாணம் செய்துகொண்டார். கொழும்பு திட்டத்தின் ஆதரவில் அங்கீகரிக்கப்பட்ட உபகாரச் சம்பளம் பெற்று அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து சென்று சமூக நல பொது பரிபாலன நிர்வாகத்துறையில் பயிற்சிபெற்று பின் இங்கிலாந்திலும் சமூகக் காப்புறுதி துறையில் தேர்ச்சிபெற்றார்.

இவர் அரசாங்கசார்பிலும் ஐக்கியநாட்டு உற்பத்தி திட்ட ஆதரவில் நடாத்தப்பட்ட ஆசியா காப்புறுதி கட்டுப்பாட்டு கமிஷனர்வட்ட மேசை மகாநாட்டில் இருதடவை பாங்கொக் நகர் சென்று ஆசியாக் கண்டத்தில் பிரதிக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஒன்றை நிறுவுவதற்குப் போதிய பல காரணங்களை எடுத்துக் காட்டி வாதித்தார்.

இவர் காரைநகர் முன்னாள் ஆசிரியர் எஸ். ஏ. நாதன் அவர்களின் மகனும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவர்.

## "புங்குடுதீவு குடிநீர்க் கஷ்டத்தை நீக்குக"

(புங்குடுதீவு)

""புங்குடுதீவுக் கிராமத்தில் தொடர்ந்து மழை இல்லாமையால் கடும் வரட்சி நிலவுகிறது. குடிநீர் பெறுவதற்காக கிறு ஊற்றுக் கிணறுகளை நோக்கி பெண்கள் பலமைல் தூரம் நடந்துசென்று மணித்தியாலக் கணக்கில் காத்திருந்து தண்ணீர் எடுக்கவேண்டிய பரிதாபகரமான நிலைக்கு புங்குடுதீவு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இரவுநேரங்களில்கூட தண்ணீர்க்குடத்துடன் செல்லும் பெண்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இன்னும் இந்தப் பிரச்னைக்கு அரசாங்கம் நிரந்தர தீர்வு காணாதபடியால் வழமைபோல் இம்முறையும் வேலணையில் இருந்து லொறி மூலம் புங்குடுதீவு மக்களுக்கு குடிநீர் வழங்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே ஒருவருக்கு ஒருகலன் தண்ணீர் வீதம் தினசரி வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உடன்மேற்கொண்டு புங்குடுதீவு மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வேண்டுகிறோம்.""

இவ்வாறுகோரும் மகஜரை ஊரைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் சமூகசேவைகள் அமைச்சருக்கு அனுப்பியுள்ளார்.

இதன் பிரதிகள் காவலூர் எம். பி. க்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ)

## ஜீவனாம்சவழக்கில்

## நீதிமன்றத்தில் ஆஜராகாத இளைஞருக்குப் பிடிவிருந்து

[பண்டத்தரிப்பு]

ஜீவனாம்ச வழக்கொன்றில் நீதிமன்றத்தில் ஆஜராகத்தவறிய பிரதிவாதிக்கு நீதிபதிபிடிவிருந்து பிறப்பித்தார்.

பனிப்புலத்தைச் சேர்ந்த சியமளாதேவி [வயது 20] என்பவர் தமக்கும் தமது பெண் குழந்தை கவிதாவுக்கும் தாபரிப்புப்பணம் கோரி அதே இடத்தைச் சேர்ந்த சிவதாஸ் என்னும் இளைஞருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்தவழக்கு பதில் நீதிபதி திரு ஜி வி பாலசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரஸ்தாப இளைஞர் தம்முடன் காதல் தொடர்பு கொண்டு இருந்ததாகவும் அதன் மூலம் தமக்குஒருபெண் குழந்தை பிறந்துள்ளதென்றும் அக்குழந்தைக்கு அவரே தந்தையென்றும் தமக்கும் குழந்தைக்குமாக மாதம் 150 ரூபா தாபரிப்புப்பணம் பெற்றுத்தருமாறும் வாதியான சியாமளாதேவி நீதிபதியிடம் தெரிவித்தார்.

பிரஸ்தாப இளைஞரான சிவதாஸ் கமத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் அதன் மூலம் 400 ரூபாவரை சம்பாதிப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பிரதிவாதிக்கு கட்டளை அனுப்பப்பட்டிருந்தும் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கத் தவறியதனால் அவருக்கு நீதிபதி பிடிவிருந்து பிறப்பித்தார்.

வாதியான இளம்பெண்ணின் சார்பில் சட்டத்தரணி திரு மு திருநாவுக்கரசு ஆஜரானார். இவ்வழக்கு மறுவிசாரணைக்காக மே மாதம் 23ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது [உ]

## வீடு திரும்புவதில் 'தாமதம்'

## தாய் கண்டித்ததால் மகள் தற்கொலை

[மட்டக்களப்பு]

வீட்டுக்கு தாமதமாக வந்த மகளை தாய் கண்டித்ததால் அவர் மனமுடைந்து நஞ்சு குடித்துத் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

மேற்படி சம்பவம் கல்லடி பிள்ளையாரடி என்னும் இடத்தில் நடைபெற்றுள்ளது. காலஞ்சென்றவர் அதே இடத்தைச் சார்ந்த உ. கனகலெட்சுமி [22 வயது] என்னும் யுவதியாவார். மேற்படி இளம் பெண்ணின் மரணம் குறித்து மட்டக்களப்பு நகரசடுதிமரண விசாரணை அதிகாரி திரு த சிவநாதன் விசாரணை நடாத்தினார். விசாரணையின் மூலம் தெரியவந்ததாவது:

வயல் வாடிக்குப் பக்கத்தில் உள்ள சிறு காட்டுக்கு காலஞ்சென்றவர் அடிக்கடி விறகு எடுப்பதற்கு செல்வது வழக்கமாம். சமீபகாலமாக காலஞ்சென்றவர் விறகு எடுக்கச் சென்று தாமதமாகி வருவாராம். இதனால் அவரை அவரது தாயாரான பா. இராசம்மா கண்டித்து வந்தாராம்.

சம்பவதினம் விறகுக்குச் சென்ற காலஞ்சென்றவர் வழமைபோன்று தாமதமாகி வந்தாராம். இதனை தாயார் கடுமையாகக் கண்டித்தாராம். அன்றைய தினம் பிற்பகல் காலஞ்சென்றவர் வீட்டினுள் மயக்கமடைந்து வாந்திஎடுத்தபடி கிடந்தாராம். அவருக்குத் தேங்காய்ப்பால் பருக்கிவிட்டு மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாராம்.

சாட்சியங்களைப் பதிவு செய்துகொண்ட சடுதிமரண விசாரணை அதிகாரி 'தற்கொலை' எனத்தீர்ப்பளித்தார். [உ]

...

## இன்றிரவு புதுவருட ஆராதனை

[யாழ்ப்பாணம்]

காலயுத்தி புதுவருடத்தை முன்னிட்டு இன்று இரவு 10 மணி 40 நிமிஷத்துக்கு உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலில் விசேஷ அபிஷேகம் பூசை முதலியன நடைபெறவுள்ளன.

காலயுத்தி புதுவருடம் இன்று இரவு 10 மணி 40நிமிஷத்துக்குப் பிறப்பதால் அடியார்களின் வழிபாட்டுக்குவசதியாய் இவ்விசேட அபிஷேகம் பூசை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

---

ஈட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ; இல. ஈடு: 14494

1. தம்பு சிவசுப்பிரமணியம்
2. பெண். தங்கரத்தினம் இருவரும்—உரும்பராய்.

வழக்காளிகள்.

எதிராக

1. சின்னத்தம்பி கந்தையா
2. பெண். செல்லம்மா இருவரும்

நாயன்மார்கட்டு—யாழ்ப்பாணம்

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் MB 14494 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ம் திகதி முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 2506-75. மேலும் இதில் ரூபாய் 1500/-க்கு 9-8-74 தொடக்கம் 14-11-74 வரை வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டியும், அதன் பின் முழுத் தொகைக்கும் இறக்கும்வரை வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் கோட்டு செலவு ரூபாய் 405/10 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிஷன் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் இறை 'கொட்டு வாசல்' பர. நில. இலா. 7 v. c. இதில் பிரிவிடப்பட்ட 3½ LMS. v. c. செய்பயிர் வான் பயிர்களும் உட்பட. புதிதாய் தயாரிக்கப்பட்ட 10 அடி அகலமான ஒழுங்கையூடாக மேற்கு எல்லை காணிப்புறமாகச் சென்று தெற்கேயாகும் ரோட்டுக்கு போக்குவரவு செய்யும் உரிமையுடையது. இதற்கு எல்லை கிழக்கு சதாசிவம்பிள்ளை கமம்பெண் வளர்ம்பிகையின் ஆதனம், வடக்கு பெருமாள் பிள்ளை இராசகாரியரின் ஆதனம் மேற்கு இளையவி கிட்டிணபிள்ளையின் ஆதனம். தெற்கு ஐயன் சின்னத் தம்பியினதும், சரவணமுத்து சேதுப்பிள்ளையினதும் ஆதனங்கள். மேற்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றுப்பங்கும்.

ப. நா. தருமலிங்கம்

கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.
23-3-78.

9022

மீனவர்கள் வருகை பற்றி

# 'எனக்குத் தெரிந்திருந்தால் பாதுகாப்பு அளித்திருப்பேன்'

## வவனிக்குள உதவி ஜி. ஏ. சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"வவனிக்குளத்தில் கொல்லப்பட்ட மீனவர்கள் அங்கு வந்ததுபற்றி எனக்குத் தெரிந்திருந்தால் அவர்களுக்குப்பாதுகாப்பு அளித்திருப்பேன் என்று மேற்படி பிரிவின் உதவி அரசாங்க அதிபர் திரு குலேந்திரன் சன்சோனிக்கமிஷனிடம் சாட்சியமளிக்கையில் கூறினார்.

திரு. குலேந்திரன் மேலும் கூறியதாவது. நான் மன்னார் அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் கடமையாற்றுகிறேன். எனது பகுதியான பாண்டியன்குளம் பொலிஸ்பொறுப்பில்லாத ஒரு பகுதியாகும். எனது பகுதியில் தான் சிங்கள மீனவர்களும் தமிழரும் கொலைசெய்யப்பட்டனர்.

வெளியிலிருந்துவந்த சிங்கள மீனவர்கள் அனுமதியில்லாமல் வவனிக்குளத்தில் மீன்பிடிப்பதாகப் புகார்செய்யப்பட்டது வவனிக்குளம் கிராமசேவகர் புகார்செய்து கோட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மீன்பிடி அனுமதி லைசென்ஸ் சமர்ப்பிக்குமாறு இவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. சிங்கள மீனவர்கள் மீன்பிடி பிரதி அமைச்சரிடமிருந்து ஒரு கடிதம் கொண்டுவந்து சமர்ப்பித்தனர்.

### பாதுகாப்புக் கேட்டனர்

ஆகஸ்ட் 18ம் தேதி வாடி எரிந்ததாகவும், வாடிகளைவிட்டுச் செல்வதற்கு பாதுகாப்புத் தேவையென்றும் சிங்கள மீனவர்கள் தெரிவித்தனர். மாங்குளம் பொலிஸார் பாதுகாப்பு அளித்தனர். எவ்வித கலவரமும் அப்போது நடக்கவில்லை.

மன்னார் பொலிஸ் நிலையம் 97 மைல்களுக்கு அப்பால் உள்ளது. குறுக்குப்பாதையால் வெள்ளாங்குளத்தால் சென்றால் 58 மைல். ஆனால் மாங்குளம் பொலிஸ் 16 மைல்களுக்கு அப்பால் உள்ளது.

ஆகஸ்ட் 28ந் தேதி மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன். சில மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அடையாளம்தெரியவில்லை என்றும் இன்ஸ்பெக்டர் கூறினார், 6 மணிக்கு நான் கந்தோருக்குச் சென்றேன். அவர்கள் கிராமசேவகருடன் தொடர்பு கொண்டு சென்றிருந்தால் இச்சம்பவம் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

அங்கு சில்வாஎன்பவரை காலவர காலம் முதல் காணவில்லை இதுதொடர்பாக தர்மலிங்கம் என்பவர் கைதுசெய்யப்பட்டார். சில்வா காணாதது பற்றி தற்பொழுதும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆகஸ்ட் 29ம் தேதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் வந்து தாங்கள் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்டதாக புகார் செய்தார்கள். நான்அவர்கள் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

அக்கிராமம் பழைய நிலைக்குத் திரும்ப ஒரு மாதம் சென்றது. அங்கு இராணுவம் பொலிசார் வந்தால், என்னைத்தான் விசாரணைக்குக் கூட்டிச் செல்வார்கள். சில சமயம் நான் கிராம சேவகரை அவர்களுடன் அனுப்புவேன்.

கிராம சேவகருக்கு அங்கு எல்லோரையும் தெரியும். கொல்லப்பட்ட மீனவர்கள் அறிவிக்கப்படவில்லை; எனக்குத் தெரிந்திருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருப்பேன்.

வவனிக்குளத்தில் 5 தமிழர்கள் கொல்லப்பட்டனர் கிராம சேவகர் அந்தோனிப்பிள்ளையும் இராணுவத்தினர் பற்றி புகார் செய்திருந்தார். அங்கு இராணுவத்தினர் நடமாட்டம் அதிகரித்திருந்தது.

30ம் தேதி காலை 5 பேர் கொல்லப்பட்டதாக தகவல் கிடைத்தது. நான் மாங்குளம் பொலிஸிற்குப்போய், மன்னார் ஏ எஸ் பிக்கு அரசாங்க அதிபருக்கும் றேடியோ மூலம் தகவல் கொடுத்தேன். செப்டம்பர் 1ம் தேதி 5 பேர் மரணம் பற்றிய மரண விசாரணை நடந்தது சடலங்கள் பழுதடைந்திருந்ததினால் கெட்ட வாடைவீசியது நான் கிட்டசெல்லவில்லை வவனிக்குளத்திலிருந்து 90 வீதமான மக்கள் வெளியேறியிருந்தனர் சிலர் மட்டுமே அங்கிருந்தனர்

கந்தையா பேரம்பலம் செல்லன் அன்னலிங்கம், முருகேசு சந்திரசேகரம், இராமநாதர் செல்லத்துரை சுப்பிரமணியம் சண்முகம் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்

இவர்களின் குடும்ப நிலைக்கு ஏற்றவாறு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

## தனிநாட்டுக்கு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வேண்டுகோளைப் பின் போடுமாறு கூறினோம். இச் சந்திப்பின்போது சம்பவங்கள் பற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் மனதில் நீங்காமல் இக்கட்டத்தில் உடனடியாக ஒரு கமிஷனை நியமிக்குமாறு கோரினோம்.

### பிரதமர் அளித்த உறுதி

தாமதமானாலுங்கூட, இக் கமிஷன் நியமிக்கப்பட்டதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர் நிலை பற்றிப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு இக்குழுவிடம் கேட்டுக்கொண்டேன். இந்தக் கோரிக்கை பயனளித்தது. வேலைக்குத் திரும்பும் காலக்கெடு பின்போடப்பட்டது. சகல பாதிக்கப்பட்ட ஊழியர்களும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றிய ஊழியர்களும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் படுவார்களெனப் பிரதமர் உறுதியளித்தார்.

இதற்கிடையில் பிரதமருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கும் ரயில்வேப் பொது முகாமையாளருக்கும் பல வேண்டுகோள் விடப்பட்டது.

தந்திகள் அனுப்பப்பட்டது

சிறிது தாமதத்தின் பின் போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுத்தார். பாதிக்கப்பட்ட ரயில்வேத் திணைக்கள ஊழியர் சங்கத்தினர் அவரை சந்திக்க ஏற்பாடாயிற்று ஒக்டோபர் 11ந் தேதி என் தலைமையில் அமைச்சரை அவரது கந்தோரில் சந்தித்தோம்.

இம்மாநாட்டின் பின்னர் அமைச்சர் பாதிக்கப்பட்ட ஊழியர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ஊழியர்களும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்படுவார்கள் என்ற பிரதமரின் உறுதிமொழியை அமுல்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வேத் திணைக்களப் பொது முகாமையாளரைப் பணித்தார். இதன் பின் ரயில்வேத் திணைக்களம் பொது முகாமையாளருடன் ரயில்வேத் திணைக்கள உத்தியோகத்தர்களுடனும் அக்டோபர் 12, 13, 14ந் தேதிகளில் சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது தற்காலிகத் தீர்வு காணப்பட்டது.

(தொடரும்)

# தாயன்பு, சகோதரபாசம் விளக்கும் 'அற்புதப்படைப்பு'

## "தென்றலும் புயலும்" பற்றி பேராசிரியர் 'வித்தி' கருத்து

(யாழ் பாணம்)

"ஈழத்துத் தமிழ்ப் படவுலகம் விரைவாக முன்னேறிவருகிறது. தரம் மிக்க நடிகர்களும், தொழில்நுட்பக் கலைஞர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்பதனை மிகத் தெளிவாக உறுதிப்படுத்தும் வகையில் 'தென்றலும் புயலும்' படம் அமைந்துள்ளது. இதயபூர்வமான மகிழ்ச்சியைத் தருகிறது"

இவ்வாறு யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ் லிடோ தியேட்டரில் நேற்றுப் புத்தாண்டு விருந்தாக வெளியிடப்பட்டுள்ள 'தென்றலும் புயலும்' என்ற ஈழத்துத் திரைப்படத்தைப் பார்த்த பின் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்

தமது மனைவியார், பிள்ளைகள் சகிதம் இப்படத்தைப் பேராசிரியர் பார்த்து மகிழ்ந்தார்.

அவர் மேலும் கூறியதாவது! "இந்த அவனியிலே அன்னையின் அன்புக்கு இணையானது எதுவுமே இல்லை என்ற பேருண்மை இப்படத்தில் மிகச் சிறந்த முறையிலே சித்தரிக்கப்பட்டிருக்கிறது. தன் சுக துக்கங்களிலும் பார்க்கத் தன் உதிரத்தில் உதித்த தன் பிள்ளைகளின் வாழ்வுக்காக ஒவ்வொரு கணமும் அன்னையுள்ளம் துடிக்கிறது என்பது துலாம்பரமாக வெளிக்காட்டப்படுகிறது.

"அதேவேளை, சகோதர பாசத்துக்கு இவ்வுலகில் எத்துணை மகத்துவமான சக்தி உள்ளது உயிரின் உள்ளோடும் உணர்வில் கலந்தது, அந்தப் பாசம் என்பது இப்படத்தில் அற்புதமாக எடுத்துக்காட்டப் படுகின்றது.

"ஆசீர்வாதம் என்ற பாத்திரப் படைப்பு தத்ரூபமாக உள்ளது. கதாநாயகனை நடித்துள்ள சிவபாதவிருதையரின் நடிப்பும் சிந்தையில் நிறைகிறது.

"காதல் காட்சிகளில் நெருக்கத்தைத் தவிர்த்திருக்கலாம். மேலைநாட்டைத் தழுவிய கவர்ச்சி நடனங்கள், நமது தமிழ்க்கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பன அல்லவே. ஆகையால் இவை அருவருப்பானது என்றே சொல்லத் தோன்றுகிறது. நடிக, நடிகையர் பொதுவாகத் தம் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

ஒலி, ஒளிப் பதிவுகள், படப்பிடிப்பு என்பனவும் நன்றாகவே இருக்கின்றன. வெளிப்புறப் படப்பிடிப்புகள் அபாரம்.

படத்தின் ஆரம்பத்தில் சற்றுத் தொய்வு நிலை காணப்படினும், பின்னர் படம் மிக விறுவிறுப்பாக, உணர்ச்சிமயமானதாகச் செல்கிறது படத்தின் முடிவு நீட்டியக்கப்படாமல், சரியான இடத்தில் சரியான முடிவாக அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

"நம் நாட்டுத் திரைப்பட உலகம், மிக வேகமாக முன்னேறி வருகிறதென்பதை உறுதிப்படுத்துகிறது இப்படம் என்று மிக ஆணித்தரமாக மீண்டும் எடுத்துக்கூறி, தரமான இப்படத்தைப் பார்க்க வேண்டியது தமிழ்மக்களின் கடமை என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்."

பேராசிரியரின் மேற்படி கருத்துக்களை அவரது துணைவியாரும் முழுமையாக ஆமோதித்தார். [உ]

## ஆசிரியர் ஆற்றும் பணி

[யாழ்ப்பாணம்]

"எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்காகத் தமது சக்தியை முழுமையாகப் பயன்படுத்துபவர்கள் ஆசிரியர்கள். அவர்களின் சேவை இந்நாட்டில் போற்றிப் புகழப்பட வேண்டியதாகும்" என்று நாரந்தனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் சேவையாற்றிய திரு. சிங்கராயர் துரையப்பாவுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் வண. சகோதரி போல் பேசுகையில் கூறினார்.

இவ்விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. அ. சிங்கராயர் தலைமை தாங்கினார்

வண. பிதா குரூஸ் சூசைதாஸ் உரையாற்றுகையில், மாணவர்கள் மத்தியில் துரையப்பா நல்லெண்ணத்துடன் பழகி, அவர்கள் நல்ல வகையில் கல்வி பயில்வதற்கு ஊன்றுகோலாக விளங்கினார் என்றார்.

இவ்விழாவில் எஸ். சத்தியமூர்த்தி. மாணவர் மன்றப் பிரதிநிதிகளும் கலந்து உரையாற்றினர். [கே-உ]

## நாளை நடக்கும் விளையாட்டுவிழா

(மட்டுவில்)

தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தின் புத்தாண்டுவிழா சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை ஆரம்பமாகும் இவ்விழாவில் பிரதமவிருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்கலந்து கொள்வார். விசேஷ பேச்சு திரு வி என் நவரத்தினம் எம் பி. விசேஷ ஆணையாளர் திரு க நவரத்தினராஜா தலைமையில் விழா நடைபெறும். சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிவிழாவை ஆரம்பித்து வைப்பார். [அ]

### புதுவருட அன்பளிப்பு

14-4-78 ஈழநாடு இதழில் மிக்கவைந் அன்பளிப்பாக, திருவள்ளுவர் பெருமான் அருளிச்செய்த "திருக்குறள் -கள்ளாமை' என்ற இலவசபிரசுரம் இணைந்திருக்கும்.

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை நெடியகாடு என்ற இடத்தில், அருளம்பலம் கிருஷ்ணகோபால் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்;

யாழ் பதில் நீதவான் திரு ஏ அன்ரனி மரணவிசாரணை நடத்தினார் சந்தேக நபரான ஞானலிங்கம் என்பவர் இது வரை கைது செய்யப்படவில்லை.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான், சந்தேகநபரை கைதுசெய்து இம்மாதம் 11ம் தேதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு வல்வெட்டித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டார்

மரணவிசாரணை, வைத்திய அறிக்கை வரும்வரை பின்போடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கைலாயபிள்ளை

அராலி தெற்கைச் சேர்ந்தவரும், வவுனியா P W D ஓவசியருமான ஆறுமுகம் கைலாயபிள்ளை காலமாகிவிட்டார் இவர் கமலாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற ஆறுமுகம், பாக்கியத்தின் அன்பு மகனும். அம்பலவாணர் சிவரெத்தினம், தங்கம்மா [ஆசிரியை இராமநாதன் கல்லூரி] திருமதி திலகவதி விஸ்வரெத்தினம், அன்னம்மா திருவிலங்கம் [ஆசிரியைகள், சரஸ்வதி மாகவித்தியாலயம் அராலி] இராசநாயகம்' ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா திருவிளங்கம் [உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்] மைத்துனரும், தயாளன், தேன்மொழி, வசந்தன், குமரன், செழியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பலவாணர் சிவானந்தன் [ஆசிரியர் றிபேறக் கல்லூரி,சாவகச்சேரி]. அம்பலவாணர் சற்குணநந்தன் [விவசாயக்கல்லூரி குண்டசாலை] ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று [13 4 78] வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக, அராலி தெற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

9035

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இந்தப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389; Registered as a Newspaper in Srilanka